உ



# வரலாற்றின் பேசு பொருளாகிய "நல்லூரான் செம்மணி வளைவு"



## கந்தபுராணக் கலாசாரப் படைப்பு

வெளியீடு – நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

உ

முருகன் துணை

# வரலாற்றின் பேசு பொருளாகிய நல்லூரான் செம்மணி வளைவு

தொகுப்பு

ஜெயேந்திரா ஹபீசன், பரமலிங்கம் மதூசன்

வெளியீடு

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல்

29.08.2021

உ
முருகன் துணை.

**நூல்:**
வரலாற்றின் பேசுபொருளாகிய
'நல்லூரான் செம்மணி வளைவு'

**தொகுப்பும் பதிவும்:**
திரு. ஜெயேந்திரா ஹபீசன் (ந.சை.த.ப.கலைக்கூடல் சமயப் பணிப்பாளர்)
திரு. பரமலிங்கம் மதூசன் (ந.சை.த.ப.கலைக்கூடல் கல்வி கலாசாரப் பணிப்பாளர்)

**படங்கள்:**
திரு. ஐங்கரன் சிவசாந்தன் (புகைப்படக் கலைஞர்)
திரு. குமாரவேல் வேல்முருகன் (புகைப்படக் கலைஞர்)

**பக்கங்கள்:** 36 **பிரதிகள்:** 500 **முதற்பதிப்பு:** 29.08.2021

**அச்சுப்பதிப்பு:**
சோலோ பிறிண்டேர்ஸ், இல.520A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் - 0760075509

**இணைப்பாக்கம்:**
திரு. இ. இளங்கோவன், செயலர் ( வட மாகாணக் கல்வி அமைச்சு)

**ஆலோசனையும் ஒப்புரவாக்கமும்:**
திரு. த. ஜெயசீலன் (ஆணையாளர், யாழ்ப்பாணம் மாநகரசபை)

**கட்டட நிதிவள ஒழுங்கு:**
திருமதி. விஜயகலா மகேஸ்வரன் (முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர்)

**கட்டட வேலைகள் முன்னிலைப் படுத்தலும் வழிகாட்டலும்:**
திருமதி. அ.எழிலரசி, பிரதேச செயலர் (நல்லூர் பிரதேச செயலகம்)

**கட்டட மின் ஏற்பாடு:**
திரு. சா. சுதர்சன், பிரதேச செயலர் (யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்)

**கட்டட ஒப்பந்தமும் கட்டடப் பணிகளும்:**
திரு. க.சாரங்கன் குழுவினர், யாழ்ப்பாணம் (SKS Constructions Pvt Ltd)

**கட்டடச் சிற்ப வேலைகள்:**
ஸ்தபதி. திரு. க.புருஷோத்தமன் குழுவினர், (கொள்ளிடம், தமிழ்நாடு, தென் இந்தியா)

**கட்டடப் பொறியியல் ஆலோசனையும் நெறிப்படுத்தலும்:**
திரு. அ.முகுந்தன் (Structural Engineer)
திரு. ச.சசிக்குமார் (Consultant Engineer)

**கட்டடத் தொழில்நுட்ப உதவி:**
திரு. வ. துஷிதரன் (Technical Officer)

**கட்டடப் பொறுப்பாண்மை:**
நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல்

**ஊக்கலும் ஒருங்கிணைப்பும்:**
திரு. க. தருமராஜா (ஓய்வுநிலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ். பல்கலைக்கழகம்)

**எண்ணமும் எழுத்தும்:**
முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் (ஸ்தாபகப் பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி)

**நூல் அச்சுப்பதிப்பு அனுசரணை:**
திரு. ச. சிவகுமரன்
சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்

**விலைப் பெறுமானம்:**
**ரூபா. 300.00**

உ
முருகன் துணை.

# செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

நல்லூர்க் கந்தப் பெருமானின் சிறப்பை உணர்த்தும் வகையில் செம்மணியில் உருவாக்கப்பட்ட வரவேற்பு வாயில் மிகப்பெறுமதியானது. இவ்வரலாற்றுப் பணி தொடர்பாக ஆவணப்படுத்தும் நன்முயற்சியில் ஈடுபட்டுள்ள நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல் அமைப்பினர் பாராட்டுக்குரியவர்கள். சைவத் தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலமாக விளங்கும் நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு இவ்வரிய மலர் வெளிவருவது சிறப்பான விடயமாகும்.

நல்லைக் கந்தப்பெருமானின் எல்லாத்திசைகளிலும் வரவேற்பு வாயில் அமையவிருப்பது பெருமைக்குரியது. நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல் அமைப்பு செயற்கரிய திட்டங்களை உருவாக்கி வளர்க்க வேண்டும். சைவ மக்கள் தமக்குரிய பண்பாட்டுப் பாரம்பரியங்களை வளர்ப்பதற்க்கு வழிகாட்ட வேண்டும். குறிப்பாக ஆலய தரிசனத்துக்காக வருபவர்களின் நடை உடை பாவனைகளை எடுத்துரைத்து அவர்களை வழிப்படுத்த வேண்டும்.

எதிர்கால சந்ததிக்கு நல்ல ஆவணமாக வெளிவரும் இம் மலரை அனைவரும் பேணிக்காத்தல் வேண்டும் இப்பணியில் ஈடுபடும் அனைவரும் என்றும் நன்றிக் குரியவர்கள்.

நன்றி

**கலாநிதி ஆறு திருமுருகன்**
(ஆலோசகர் - நல்லூர் சை.த.ப. கலைக் கூடல்)

29.08.2021
நல்லூர்.

உ
முருகன் துணை.

# "நல்லூரான் செம்மணி வளைவு" எமது பிரதேசத்தின் பழம் பெருமை கொண்ட "கந்தபுராணக் கலாசார" வெளிப்பாடாக அமையப்பெற்றுள்ளது - இணைத் தலைவர் வாழ்த்து

அடையாளச் சின்னங்களாக, அலங்கார வளைவுகள் உலகின் பல பாகங்களிலும் அமையப்பெற்றுள்ளன. அவை அந்தந்தப் பிரதேசங்களின் கலை, கலாசார, பண்பாட்டு, சமூக, பொருளாதார அம்சங்களின் வெளிப்பாடுகளாகத் தோற்றம் தருவதுண்டு. மேலும் அவை பெரும்பாலும் அப்பிரதேசங்களின் எல்லைகளில் அல்லது மத்தியில் அமைந்து கவினுறு காட்சி வெளிப்பாடுகளாக மிளிர்கின்றன. இந்த வகையில் யாழ்ப்பாணத்தின் வாயிலில், சரித்திரப் பிரசித்திகொண்ட செம்மணி வீதியில் அமையப் பெற்ற "நல்லூரான் செம்மணி வளைவு" எமது பிரதேசத்தின் பழம் பெருமை கொண்ட "கந்தபுராணக் கலாசார" வெளிப்பாடாக அமையப் பெற்றுள்ளமை சிறப்பு வாய்ந்ததாக நோக்குதற்குரியது.

"எந்த ஒரு செயலுக்கும் பதிவு அவசியமாகும். அப்பதிவுகளே எதிர்கால சந்ததியினருக்கு அது தொடர்பான உண்மை நிலையை தெளிவுபடுத்த உதவும்" என்பது ஆன்றோர் வாக்கு. அந்தக் கருத்துக்கு அமைவாக நல்லூரான் செம்மணி வளைவு" தொடர்பான சகல அம்சங்களையும் அழகுறத் தொகுத்து பதிவு செய்துள்ள "நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கலைக் கூடலின்" பணிப்பாளர்கள் திரு.ஜெயேந்திரா ஹபீசன், திரு.பரமலிங்கம் மதூசன் ஆகியோரின் முயற்சி பாராட்டுக்குரியதாகும். மிக நேர்த்தியாக வனப்புற தொகுப்பாக்கம் செய்து பதிவு செய்துள்ளார்கள். எல்லோராலும் விரும்பித் தேடிக்கற்கக் கூடியவகையில் மேற்படி வளைவு தொடர்பான சகல விடயங்களையும் உள்ளடக்கி நூலினை உருவாக்கிய அவ்விரு இளைஞர்களையும் மீண்டும் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம். மேலும் அவர்களது எதிர்காலம் சிறக்க எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தசுவாமியாரைப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

நன்றி

29.08.2021
நல்லூர்.

**முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன்**
(இணைத்தலைவர் - நல்லூர் சை.த.ப. கலைக் கூடல்)

உ
முருகன் துணை.

# கந்தபுராணக் கலாசார வெளிப்பாட்டுடனான நல்லூரான் செம்மணி வளைவு - இணைத்தலைவர் வாழ்த்து

பிரதேசங்களின் கலை, கலாசார, பண்பாட்டு, சமூக, பொருளாதார அம்சங்களின் வரலாற்றுப் பதிவுகளை அடையாளச் சின்னமாகவும் அலங்கார வளைவுகளாகவும் அமைத்து சந்ததிகள் அறிந்து கொள்வதற்காக வழங்குகின்ற செயற்பாடு ஆரம்ப காலந்தொட்டு பின்பற்றி வரப்படுகின்ற மரபு ஆகும். எனினும் இது தற்போது அருகிவருவது கவலைக்குரியதுடன் மீண்டும் புதுக்கவேண்டிய தொன்றாகும்.

அந்தவகையில் கந்தபுராணக் கலாசார மரபினைப் பின்பற்றி வருகின்ற நல்லூர் ஆலயத்தின் பெருமைகளை மிளிரச் செய்யும் வகையில் யாழ்ப்பாண நகரின் நுழைவாயிலான செம்மணி மண்ணில் நல்லூரான் அருளால் அமையப் பெற்ற "நல்லூரான் செம்மணி வளைவு" பிரதேசத்தின் பழம்பெருமை கொண்ட கந்தபுராணக் கலாசாரச் சின்னங்களை தாங்கி அழகாக யாழ் நுழைவாயிலில் மிளிர்கின்றது.

தற்போது இவ்வளைவின் அனைத்து அம்சங்களையும் அனைவரும் படித்து அறியக்கூடிய வகையில் இவற்றின் உள்ளடக்க அம்சங்களை அழகுற தொகுத்து நூல் வடிவில் பதிவு செய்துள்ள "நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடலின்" பணிப்பாளர்கள் திரு. ஜெயேந்திரா ஹபீசன், திரு. பரமலிங்கம் மதூசன் ஆகிய இளையோரின் முன்முயற்சி பாராட்டி வாழ்த்தப்பட வேண்டியதொன்றாகும். அந்தவகையில் நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடலின் பணிப்பாளர்களது பணி மென்மேலும் சிறக்க நல்லூர்க் கந்தனின் அருளாசிகளுடன் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

**திரு இலட்சுமணன் இளங்கோவன்**
(இணைத்தலைவர் - நல்லூர் சை.த.ப. கலைக் கூடல்)

29.08.2021
நல்லூர்.

உ
முருகன் துணை.

# ஞான வழிக் கலங்கரை

நல்லைக் கந்தனின் கோவில் நிழல் இன்று
நாயன்மார்க்கட்டைத் தாண்டியே ' செம்மணி '
எல்லை மட்டும் கவிந்து ஒளிர்ந்தது!
எவர்க்கும் தனது இருப்பிடத்தின் திசை
சொல்லியே வரவேற்றது!
கம்பீரத் தோற்றத்தில் 'நல்லை வேலாய்' நிமிர்ந்தது!
கல்லில் கவிதையாம் … 'நல்லூரான் செம்மணி
வளைவு' நம் காவல் கோபுரம் ஆனது !
யாழின் மேன்மை உயிர்ப்பு, தமிழ் சைவ

வாழ்வின் குறியீடு, எங்கள் கலாசார
ஆழத்தின் அடையாளம், வரலாற்றில்
அசைந்திடா நம் இருப்புக் குவமானம்,
வாழும் நல்லூரான் கோவிலே! யாழ் மண்ணின்
மரபினுக் குயிரூட்டுவோன்… கந்தனே!
நீழல் அன்னான் அருளே! நிமிர்ந்தினி
நிலைக்கும் வளைவு… வேலன் புகழ் பேசுமே!
நலன் விரும்பிகள், குமரன் அடியவர்,

நல்லரச பணியாளர், மேன்மக்கள்
பலர் இணைந்தனர்…. பணிகள் தொடங்கிற்று!
பல இடர், 'பெருந் தொற்று', 'ஊர் அடங்கு'… இவை
கலைக்க வில்லை இக்கனவை! குறைகளைக்
களைய… பேரெழில் நனவில் மலர்ந்தது!
உலகம் போற்றும் சரிதம்… 'இப் பொங்கலில்'
உதய மாகுது… முருகன் செயல் இது!
நல்லைக் குகன் முகம் காட்டி அழைப்பதும்,

நம் மகிமையை உலகுக் குரைப்பதும்,
செல்ல ரித்துச் சிதையும் வழக்கங்கள்
திரும்ப வைத்து நாம்… நம்புகழ் போற்றிடச்
சொல்வதும், துயர் சூழத் தடுப்பதும்,
தொன்மை ஆலயத் 'தோரண வாசலும்',
'நல்லைக் கோபுர நகலும்', இவ் வளைவு.!
நம் ஞான வழிக்குக் கலங்கரை காண்…. இது!!

29.08.2021
நல்லூர்.

**கவிஞர் தனபாலசிங்கம் ஜெயசீலன்**
(இணைச்செயலர் - நல்லூர் சை.த.ப.கலைக் கூடல்)

உ
முருகன் துணை.

# நல்லூரான் செம்மணி எழிலார்ந்த அலங்கார வளைவு நூலிற்கான இணைச்செயலர் வாழ்த்துச்செய்தி

அலங்காரக்கந்தனின் அருளாட்சி நிலவும் நல்லையம்பதியின் நுழைவாயில் எனக்கருதும் செம்மணிச்சாலையின் முகப்பில் அமையப்பெற்ற எம்பெருமானின் பெரும் புகழ்பரப்பும் எழிலார்ந்த அலங்கார வளைவு நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மகிழ்வடைகின்றேன்.

ஒரு நாட்டின் சமுதாய வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் ஆலயங்கள் சான்றாக விளங்குவது போல ஒரு பிரதேசத்திலுள்ள ஆலயத்தின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை; கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்கள், நாயன்மார்களால் பாடப்பெற்ற திருமுறைகள் மற்றும் ஆழ்வார்களால் பாடப்பெற்ற பாசுரங்கள் மூலமாகத்தான் எதிர்கால சந்ததியினர் அறிந்தகொள்ள முடிகின்றது.

அந்த வகையில் இலங்கைத்திருநாட்டின் வடபகுதியான யாழ்ப்பாணத்தின் முகப்பில் அமையப்பெற்ற நல்லூரான் செம்மணி வளைவு எமது இந்துசமய பாரம்பரியத்தின் அடையாளச் சின்னமாக இன்று அமைக்கப்பட்டிருப்பது பெருமைக்குரிய விடயமாகும். திருமூலரால் சிவபூமி என அடையாளப்படுத்தப்பட்ட ஈழத்திருநாட்டில் எப்பாகம் நோக்கினாலும் இறைபுகழ் பரப்பும் அடையாளச்சின்னங்கள் எமது சமயத்தின் தொன்மையையும், பாரம்பரியத்தையும் பறைசாற்றி நிற்கின்றன. சைவமும் தமிழும் இரண்டறக்கலந்த கந்தபுராண கலாசார மையமாகத்திகழும் யாழ் மண்ணில் இவ்வாறான அலங்கார வளைவு அமைக்கப்பட்டுள்ளமை சைவத்தின் மேன்மையை எடுத்தியம்பும் வரலாற்றுச் சாதனமாக அமைந்துள்ளது.

"நெற்கதிர்கள் இருபுறமும் சாமரை வீச, நீரலைகள் இளந்தென்றல் சொரிய, யாழ் வரவின் அருகினிலே நல்லையின் புகழ்பாடும் அலங்கார வளைவுதனை காணும் போது பேரானந்தம் அடையாத உள்ளங்கள் எதுவுமுண்டோ!" என வியக்கும் அளவிற்கு அலங்காரவளைவு காட்சி தருகின்றது. இத்தகைய பல அம்சங்களையும் ஒன்றாகத்தொகுத்து தத்துரூபமாக அமைத்துள்ள நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக் கூடலின் பணிப்பாளர்கள் திரு. ஜெயேந்திரா ஹபீசன், திரு. பரமலிங்கம் மதூசன் ஆகியோரின் அயராத முயற்சி பாராட்டப்படவேண்டியதாகும். மேலும் இவ்வளைவின் அடையாளமாக வெளியிடப்படுகின்ற இம்மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வு அடைகின்றேன். எமது சமய கலாசார விழுமியங்கள் என்றும் பேணிப்பாதுகாக்கப்படும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்நூல் அமைகின்றது என்பதை மனமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி

**திரு சாம்பசிவம் சுதர்சன்**
(இணைச்செயலர் - நல்லூர் சை.த.ப. கலைக் கூடல்)

29.08.2021
நல்லூர்.

உ
முருகன் துணை.

# வேலரசு ஆளுமட்டும் விளங்கும் நிலைத்தே

எல்லவரும் போற்றிடவே இன்னருளை வாரும்
எழிலாரும் பொழில்சூழும் நல்லை முருகன்
இல்நுழைய நாடுவார்க் கின்முகம் மலர்ந்தே
இகம்புகழும் கலாசாரம் இனிதே தேக்கி
நல்வரவு கூறியழை நயமே போற்றி
நவிலுவகை கலையழகாய் நாட்டி வைத்த
வில்வளைவு பண்பாட்டை விரித்தே காட்டி
வேலரசு ஆளுமட்டும் விளங்கும் நிலைத்தே

நம்மணியாய் நாயன்மார் கட்டும் வாழ
நாளுமருள் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியாம்
அம்மணியாள் அரசினிடை அமைந்தே மிளிரும்
அழகொளிரு கோபுரம தெழுந்தே நோக்கும்
செம்மணிவா யில்நல்லூர் முருகர்க் காயே
செழுமைநிறை பண்பாடு சேர்த்தே யிழைத்த
இம்மணியார் வில்லளைவு இகமுள் காலம்
இறைநந்தி போலிருந்து வாயில் காக்கும்.

கொடுங்கை அமைப்பினொடு கொலுவீற் றிருந்தே
கோவிலணை அடியாரை ஆற்றுப் படுத்த
நெடுங்கை எனவெழுந்த தூண்கள் நான்கு
நிகரிலெழில் பண்டிகைகள் மணிக்கோ புரங்கள்
விடங்கனது காதிலுரை விளம்பல் போன்ற
விடயங்கள் பலவோடு நல்லூர் முருகன்
தடங்கையென நீண்டிருமிவ் வளைவு நீணாள்
தரையெமது பண்பாட்டை தாங்கும் நிலத்தே.

ஆறுதலை சண்முகரும் தேவி மாரும்
அழகொளிரு கோபுரமோ டோங்கா ரத்தின்
தேறுதலை உரைகுருவும் திருவும் வாக்கும்
சேவலொடு மயில்கூவித் துயர மெல்லாம்
பாறுதலை அறிவுறத்த பழநி யாரும்
பருவயிற னொடுமுருகும் வேலை வாங்கி
ஆறுதலை தருவமென வருவோர்க் கெல்லாம்
அறைவளைவு யாழிற்கே அணியாய் நிற்கும்.

29.08.2021
நல்லூர்.

**கவிஞர் நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்**

உ
முருகன் துணை.

# கண்டேன் நல்லூரான் செம்மணி வளைவு.

நல்லூர் மாதலத்தான் கோபுர மாமகிமை - வான் உயர

ஓங்கி நிற்கும் நல்லூரான் செம்மணிவளைவு கண்டேன்.

இருமருங்கும் மாதவரை இருகை கொண்டு தழுவிய - திருமுருகன்

சுப திருமணக் காட்சிகண்டு உள நிறைவும் கண்டேன்.

தென் புறம் பழனியும் திசை திரும்ப விநாயகனும் - நடுவில்

நாயகியாம் மகாலட்சுமியுமென நல்லதொரு காட்சி கண்டேன்.

தந்தைக்கு உபதேசித்த தனிப்பெரும் காட்சியொடு - சக்தி கையால்

வேல்கொடுக்க சங்கரன் கையிலேந்தும் வீரநிறை காட்சிகண்டேன்.

முத்துக் குமரனோடு சேவல் எல்லாம் நின்று கூவும் - சிறப்பான

காட்சியும் அங்குக் கண்டேன்.

நான் கண்ட காட்சிகளால் எனை மறந்து - உளமெங்கும்

உணர்ச்சி பொங்கி மெய் சிலிர்த்து - நவில்கின்றேன்

உளமார்ந்த நன்றிகளும் வணக்கங்களும் - இத் தெய்வீக

வளைவுதனை ஆக்கியோர்க்கும் உதவியோர்க்கும்..

ஓம் சண்முகா சரணம்.

29.08.2021
நல்லூர்.

**திரு கந்தசாமி தருமராஜா** (நல்லூர் தருமன்)

உ
முருகன் துணை.

## ஏடு இட்டோர் சிந்தனையில் இருந்து

**நா**டுகாண் பயணங்கள், புதிய நாடுகளின் அறிமுகங்கள், குடியேற்றங்கள், ஆட்சி எல்லைகள் அகன்றமை, வரலாறுகள், பொருளாதார மாற்றங்கள், நாகரிகங்கள் வளர்ந்தமை, உண்மைகள் தெளிந்தமை, சமயங்கள், நம்பிக்கைகள், அனுட்டானங்கள், கிரியைகள், சம்பவங்கள், நிகழ்ச்சிகள், புதிய ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள், அறிவுத்தேட்டங்கள்..... சந்ததியினர் அறிந்து, தெரிந்து கொள்ள பதிவுகளே துணை நின்றன - உறுதிசெய்தன.

ஓலைச்சுவடிகளும், கல்வெட்டுக்களும், நூல்களும் சமகாலத்தில் பிரதானமாகக் கணினிகளும் அதற்கு உதவின. பதிவுகளையே தமக்கேற்ப மாற்றி சுயம் காணும் காலமிதில், பதிவுகளே இல்லாது விடின்?... — அதற்காகவே இச் சிறு பதிவு முயற்சி பயனுள்ளதாக அமையும் என்பது எம் எண்ணம்,

எம் எண்ணம் இனிதே நிறைவு காண உதவியவர் பலர்.

அவர்களுக்கு நன்றி நவிலல் எமது பண்பாடு - முதலில் நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் — நூல் உருவாக வழிகாட்டி உதவியது. வெளியிட்டு வைக்கின்றது. கூடலுக்கு எமது மனப்பூர்வ நன்றிகள். நூலுக்கு ஆசியுரை வழங்கிய ஆலோசகர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களுக்கு எமது சிரம்தாழ்த்திய வணக்கங்களும் நன்றிகளும். எம்மை கந்தனடியவர்களாக வளர்த்த எமது பெற்றோருக்கும் எம்மிரு வருக்குமான அடையாளத்தை இச்சமூகத்தில் பெறவைத்தோடு நல்லூரன் செம்மணி வளைவுக்கான கட்டுமான பணிகளில் ஆரம்பம் முதல் இறுதிவரை ஒருங்கிணைப்பு பணிகளை நிறைவேற்றிய திரு க. தருமராஜா (நல்லூர் தர்மன்) அவர்களுக்கு எமது நன்றிகள். எமது எண்ணத்தை எழுத்துருவாக்கியதுடன், ஆசியும் வழங்கிய ஆசான் இணைத் தலைவர் முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களுக்கும் மேலும் எமது முயற்சிக்கு ஆசிகளை வழங்கிய இணைத் தலைவர் திரு.இ.இளங்கோவன் இணைச்செயலர் திரு.த.ஜெயசீலன், திரு.சா.சுதர்சன் ஆகியோருக்கும், கவிஞர் இராசையா குகதாசன் அவர்களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகள்.

நூலில் இடம்பெற்ற புகைப்படங்களை அழகுற பதிவு செய்து உதவிய திருவாளர்கள் ஐங்கரன் சிவசாந்தன், மற்றும் குமாரவேல் வேல்முருகன் அவர்களுக்கும் நூலினை அச்சுப்பதித்த சோலோ அச்சகத்தினருக்கும் நூல் பதிப்புக்கு அனுசரணை வழங்கி உதவிய திரு. ச. சிவகுமரன் அவர்களுக்கும், எமது அன்பு கலந்த நன்றிகள்.

**திரு ஜெயேந்திரா ஹபீசன்,**
(ந.சை.த.ப. கலைக்கூடல் சமயப் பணிப்பாளர்)


29.08.2021
நல்லூர்.

**திரு பரமலிங்கம் மதூசன்**
(ந.சை.த.ப. கலைக்கூடல் கல்வி கலாசாரப் பணிப்பாளர்)

# அழகு மிளிரும் அடையாளச் சின்னங்கள்.

வளைவுக் கட்டடக் கலை அம்சங்களை உள்வாங்கி அழகு படுத்தப்பட்ட அடையாளச் சின்னங்கள் உலகின் பல இடங்களிலும் அமையப்பெற்றுள்ளன. அவை அந்தந்த பிரதேசங்களின் கலை, கலாசார, பொருளாதார, பண்பாட்டு, அம்சங்களைத் தெளிவுடன் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன.

## மாதிரிக் கட்டட கட்டுமான வளைவு



1. கட்டடக்கலை வளைவு - முட்டுக்கல்
2. விதான ஆப்புக்கல்
3. கவான்புறம்
4. விற்கம்பத்தொப்பி
5. காவனகம்
6. ஏற்றம்
7. தெளிவு இடைத்தூரம்
8. தாங்கி நிற்கும் கட்டுமானம்

## வளைவுக் கட்டடக் கலையின் தொன்மை

வளைவுக் கட்டடக் கலை கி.மு. 2 ஆம் நூற்றாண்டளவில் மெசொப்பொத்தேமியாவில் கட்டட வேலைகளில் செங்கல் கட்டுமான வளைவுகளின் நிர்மாணிப்பில் இருந்து ஆரம்பமாயிற்று என்று அறியமுடிகின்றது, மேலும் இவ் வளைவுகளைக் கட்டும் முறை பற்றி பண்டைக்கால பபிலோனியர், எகிப்தியர், அசிரியர் போன்றோர் அறிந்திருந்த போதிலும் அவர்கள் அந்த நுட்பத்தை நிலத்தடி வடிகால்கள் போன்ற கட்டுமானங்களிலேயே பயன்படுத்தினர்.

இக்கட்டடக் கலையை செம்மைப்படுத்தி, சிறப்புக்குரிய கட்டடக்கலைக் கூறாக்கிய பெருமை உரோமானியரையே சாரும். இக் கலையில் பல்வேறு வகைப்பட்டனவான வளைவுகளின் சீரமைந்த தொழில்நுட்ப முறையிலான கட்டமைப்பின் பயன்பாடு உரோமானியர்களாலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது என்பதையும் அறிய முடிகின்றது, மனித இனம் காட்டு வாழ்க்கை முறைமையில் இருந்து முன்னேற்றம் கண்டு நாட்டுவாழ்க்கை முறைமைக்குத் திரும்பியபோது சிறு குடிசைகள் பெரியனவாகித், தொடர்ந்து தமக்குரிய உரிமைகள் கடமைகள் ஆகியவற்றை உறுதி செய்து கொண்டதுடன் பெரிய வீடுகளையும் அமைத்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.அவ் வீடுகளுக்கு வரையறை செய்யப்பட்ட எல்லைகளை அமைத்துப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது.அதனை அமைத்து தனது இருப்பை உறுதி செய்து கொண்டனர். அதன் வழி நிரந்தரமான வாழ்க்கை முறைமை மனித இனத்துடன் சேர்ந்துகொண்டது.ஓரிடத்தில் நிலையாக வாழ்ந்ததால் கிடைத்த ஓய்வு நேரத்தில் தமது சிந்தனையை வளர்த்துக் கொண்டனர். அதுவே மனித இனத்தின் முன்னேற்றத்துக்கு பலவழிகளிலும் வித்திட்டது.

குடும்பமாக வாழ ஆரம்பித்தனர். குடும்பங்கள் இணைந்து சமூகத்தினை உருவாக்கினர். அந்தச் சமூகங்களால் கிராமங்கள், நகரங்களாக உருவாகின. அவற்றின் இணைப்பால் நாடுகள் உருவாகிக் கொண்டன.

மனிதர் சிறிய குடிமனைகளில் வாழ்ந்த காலத்தில் இருந்தே, தமது எல்லைக்குள் இருந்து வெளியே செல்லவோ அல்லது உள்ளே வரவோ வாசல்கள் அல்லது வாயில்களை அமைத்துக் கொண்டனர். அவற்றை நாளடைவில் பிறரைத் தங்கள் எல்லைக்குள் வரவேற்கும் சின்னமாக உயர்த்திக்கொண்டனர். அதனைப் பின்னர் தங்களது கலை, கலாசார, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களின் தரத்தை வெளிப்படுத்தும் "அழகுபடுத்தப்பட்ட அடையாளச் சின்னங்களாக" (IDENTITY STRUCTURE) அமைத்து மகிழ்ந்தனர்.

## வாயிற் கட்டடங்கள்

யாழ்ப்பாணத்தில் பல பழைய வீடுகளின் நில எல்லைகளின் வாயில்களில் இவ்வகையான **வாயிற் கட்டடங்கள்**, **நடை**, **திண்ணை** அல்லது **இளைப்பாறும் படுக்கை, விளக்கு மாடம்** போன்ற பாரம்பரிய கலாசாரச் சின்னங்களுடன் கூடிய வரவேற்பு வாயில்கள் ஆகியன அமைக்கப்பட்டிருந்தன. மேலும் இவ் வாயில்களில் அழகுபடுத்தப்பட்ட "சங்கடப் படலைகளும்" அமைக்கப் பட்டிருந்தன. சில வாயிற் கட்டடங்களில் ஓட்டினாலான கூரைக்குப் பதிலாக சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய வாயிற் கட்டடங்கள் நாளடைவில் புதிய




சங்கிலியன் அரண்மனை வாயிற்கட்டடம்

வடிவமைப்பைப் பெற்றுக்கொண்டன. இவ்வகையான வாயிற் கட்டடங்களை இன்றும் எங்கள் கிராமப் புறங்களில் காணக் கூடியதாக உள்ளது.

ஆனால் இங்கு பெரும் கவலைக்குரிய செய்தி யாதெனில்; பெருமளவிலான இவ்வகை வாயிற் கட்டடங்கள் இன்று மாற்றப்பட்டுள்ளன, அல்லது மறக்கப்பட்டு அழிந்து வருகின்றன. இதற்கு சிறந்த உதாரணமாக யாழ்ப்பாணம், நல்லூரில் முத்திரைசந்தை சந்திக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சங்கிலியன் அரண்மனை வாயிற் கட்டட வளைவினை சுட்டிக் காட்ட முடியும். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரியமான அவ்வளைவு யாழ்ப்பாணத்தின் அடையாளம். அதுவும் மந்திரி மனையும் பிறவும் காலத்தின் கோலத்தினால் மாற்ற முற்றும், மறந்து அழிவுக்குள்ளாகியும் நாளுக்குநாள் தேய்ந்து செல்கின்றன. இப்போ அவை எதிலும் பேசுபொருளாகாது மதிப்பிழந்துள்ளமை ஏன்? இதனை ஆழ்ந்து சிந்தித்து தூரப்பார்வையற்ற போக்கும் ஏன்? விடை காண முடியாத வினாக்கள்!

சமகாலத்தில் நாடுகள் பலவும் பாரம்பரிய பொக்கிஷங்களைப் பாதுகாப்பதிலும் பராமரிப்பதிலும் அதிக அக்கறை செலுத்துகின்றன. சிறப்பாக இந்த அழகு படுத்தப்பட்ட வாயிற் கட்டடங்கள் நிர்மாணிப்பதன் மூலமும் ஒரு இனம் தனது கலை, கலாசார, பொருளாதார, பண்பாட்டு விழுமியங்களைத் தெரியப்படுத்திப் பாதுகாக்கலாம் என்ற நோக்குடன் அவற்றை அமைத்துள்ளன. பல நாடுகள் தமது எல்லையிலும் இவ்வாறான பல வரவேற்பு வளைவுகளை அமைத்துள்ளன. இந்தியாவில் தலைநகர் புதுடெல்லியிலும், மும்பை நகரிலும் மற்றும் வேறு மூன்று இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள **INDIAN GATE** எனும் முதலாம் உலகப் போரில் மரணமடைந்த போர் வீரர்களின் ஞாபகார்த்த வளைவுகளும் இங்கு நினைவு கொள்ளக் கூடியவை.



இந்தியா கேட்

பிரான்ஸ் நாட்டின் தலை நகர் பாரிஸ் நகரின் மத்தியில் அழகான சிற்ப வேலைப் பாடுகளுடன் கூடிய வாயிற் கட்டடம் ஒன்று அமைந்துள்ளது. இதுவும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அழகான அடையாளச் சின்னமாகும். சுற்றுலாப் பயணிகளாலும்

மற்றவர்களாலும் ஆர்வத்துடன் பார்வையிடப்படுவதுடன் அந் நாடும் அதனைப் பாதுகாத்து வருகிறது.

இன்னும் பொதுவாக ஐரோப்பிய நாடுகளுக்குத் தரை வழியாகப் பயணம் செய்யும் பொழுதும் ஒரு நாட்டிலிருந்து மற்றோர் நாட்டுக்குள் பிரவேசிக்கும் பொழுதும், பிரதான நகரங்களுக்குள் நுழையும் பொழுதும் இவை போன்ற "அழகுபடுத்தப்பட்ட வாயிற் கட்டடங்களைக்" கண்டு களிக்கமுடியும். அவை அனைத்தும் அந்தந்த நாட்டின் கலை, கலாசார, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன.

**பிரான்டென்போர்க் வாயில், ஜேர்மனி**





**தேசிய நினைவு வளைவு, அமெரிக்கா**





## லாஜர் சேம்ப்ஸ் எலிஸெஸ் வளைவு, பிரான்ஸ்





## பளிங்கு வளைவு, லண்டன்







## பிரின்சஸ் கேட்ஸ், கனடா





## லூசெர்ன் ரயில் நிலையம், சுவிட்சர்லாந்து





## சாஹித் கேட், நேபாளம்







## சீனா நகர கேட்





## யாழ்ப்பாணத்தின் வரவேற்பு வளைவு



யாழ்ப்பாணத்தில் A9 பாதையில் (கண்டி வீதி) செம்மணி பாலத்துக்கு அண்மையில் ''யாழ்வரவு'' எனும் வரவேற்பு வளைவு கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. அது எமது கலாசாரப் பின்னணி கொண்டு நிறுவப்பட்டுள்ளதுடன் அதன் உச்சியில் யாழ்ப்பாணத்தின் அடையாளச் சின்னமான ''**யாழ்**'' வனப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் எமது உயர்வான விழுமியச் செயற்பாடான விருந்தினரை வரவேற்கும் இயல்புக்கமைவாக ''வருக யாழ்நகர் வரவு நல்வரவாகுக'' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதன் மறு பக்கத்தில் ''நன்றி மீண்டும் வருக'' என்று பொறித்து யாழ்ப்பாண சமூகத்தின் நன்றி மறவாப் பண்பியல்பை வெளிப்படுத்தி வழியனுப்பி வைக்கின்றமை சிறப்பே.

## யாழ்ப்பாணத்தில் புதிய அடையாள வாயிற் கட்டடம்



## எமது கலை கலாசாரப் பண்பாட்டு அம்சங்கள் புலனாக வனப்புற அமைக்கப்பட்டுள்ள நல்லூரான் செம்மணி வளைவைப் பற்றி......

யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தினை ''கந்தபுராணக் கலாசாரம்'' என்று விசேடித்துரைப்பார் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள். முருக வழிபாட்டில் ஊறித்தலைத்தவர்கள் நம்மவர்கள்.

யாழ்ப்பாண மக்கள் தம்மைக் காக்கும் கடவுளாக அனுதினமும் வணங்கிப் போற்றித் துதிக்கப்படுபவர் ''**நல்லூர் கந்தசுவாமியார்**''. இவற்றை மனதிருத்தி நல்லூர் கந்தசுவாமியாரின் அடியவர்கள் சிலர் யாழ்ப்பாண வாசலில், வரலாற்று முக்கியத்துவம் பெறும் ஸ்தானத்தில், புராதன இராசதானியின் குதிரைப்படைகள் அடிக்கடி அணிவகுத்துச் சென்ற வீதியில் கந்தபுராணக் கலாசார சிறப்பும், நல்லூர் கந்தன் பெருங்கோயிலுக்கு பக்தர்களை ஆற்றுப்படுத்தும் நோக்கும் கொண்ட கவினுறு அடையாள வாயிற் கட்டடம் ஒன்றை அமைக்க மனம் கொண்டனர். அவர்களின் அவ் விருப்புக்கு கந்தசுவாமியாரின் அனுக்கிரகம் முழுமையாகக் கிடைத்தமையை உணர்ந்து மகிழ்ந்தனர்.

ஆரம்பகட்டப் பணிகளில் உற்சாகமாக ஈடுபட்டனர். இது தொடர்பாகச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பான வரவேற்பு கிடைத்தது. நல்லூர் பிரதேச சபையினர், கோப்பாய் பிரதேசசபையினர், யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினர், யாழ்ப்பாணம் மாநகரசபையினர், வீதி அதிகார சபை அதிகாரிகள், மின்சாரசபை அதிகாரிகள், நீர் வடிகால் சபை அதிகாரிகள் என அனைவரும் நேசக்கரம் தந்து ஆதரித்ததுடன் தகுந்த முறையில் ஆற்றுப்படுத்தியும் ஊக்கம் தந்தனர்.



முருகப் பெருமான் கிருபையுடன் ‘விகாரி’ வருடம் (2019) ஆம் ஆண்டு நல்லூரனது பூங்காவனத் திருவிழாவன்று (31.08.2019) காலையில் சிவஶ்ரீ சதா. வைகுந்தவாசுதேவ குருக்களின் சமய அனுஷ்டானங்களுடன் “நல்லூரான் செம்மணி” வளைவிற்கான அத்திவாரம் இடப்பட்டது. மத்திய அரசின் அன்றைய கல்வி அமைச்சின் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் உற்சாகத்துடன் நிதி வள ஒழுங்குகளை பெற்று உதவினர்.

நல்லூர் பிரதேச செயலர் திருமதி. எழிலரசி யோகநாயகம் உரிய முறையில் கட்டடப் பணிகளை வழி நடத்தினார். செம்மணி வீதியில் மாற்றுப் பாதை அமைக்கப்பட்டு வேலைகள் ஆரம்பமாகின. துரதிஷ்ட வசமாக மழையும், கொரோனவின் முடக்கமும் வேலையினை வேகமாகச் செல்லவிடாது தாமதப்படுத்தின. ஆறு மாத காலத்தில் நிறைவு செய்வதாகத் திட்டமிடப்பட்ட பணிகள் நீண்டு சென்றன.













கட்டடக் குழுமம் உற்சாகம் இழக்கவில்லை எல்லாத் தடைகளையும் வெற்றி கண்டு கருமமாற்ற முருகப்பெருமான் அவர்களுக்கு உதவினார். அனைவரதும் அயராத முயற்சியினால் இன்று யாழ்ப்பாணத்தின் கந்தவேள் போற்ற வாயிலில் கம்பீரமாக எமது கந்தபுராணக் கலாசாரத்தைப் பிரதிபலித்து ஓங்கி உயர்ந்து அழகுறக் காட்சி தந்து நிற்கின்றது அந்தக் கவினுறு வாயிற் கட்டடம்.



## புதிய வாயிற் கட்டடத்தின் சிறப்பம்சங்கள் சில...

இந்த வாயிற் கட்டடம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று கந்தபுராணக் கலாசாரத்தைப் பிரதிபலித்து நல்லூர்க் கந்தசுவாமியாரின் அருட் கடாட்சத்தை வெளிப்படுத்தி பக்தர்களை ஆற்றுப்படுத்தி அமையப்பெற்றுள்ளது.

சிறப்பாகக் கொடுங்கை அமைப்புடன் கூடிய நுழைவாயில் அமைக்கப்பட்டு நடுவில் இரண்டு தளங்களைக் கொண்ட இராஜ கோபுரம் ஒன்று பண்டிகையில் ஐந்து கலசங்களைக் கொண்ட அமைப்புடன் நிறுவப்பட்டுள்ளது.



கட்டடத்தைப் பஞ்சாங்க வேலைப்பாடுகளுடன் அமைந்த நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன.





கோபுரத்தின் நடுவில் கிழக்கு நோக்கி சண்முகப் பெருமான் (ஆறுமுகசுவாமி) வள்ளி தெய்வயானை சமேதரராய் அமர்ந்து அருள் பாலித்தருள்கின்றனர்.



கோபுரத்தின் மறு பக்கத்தின் நடுவில் மேற்கு நோக்கி முத்துக்குமாரசுவாமி வள்ளி தெய்வயானையுடன் அமர்ந்து அருள் பாலித்தருள்கின்றனர்.




கோபுரத்தின் மகா நாசியில் தெற்குப் பக்கத்தில் செல்வத்துக்கு அதிபதியான இலக்குமியும் வடக்குப் பக்கத்தில் கல்விக் கடவுள் சரஸ்வதியும் வீற்றிருக்கின்றார்கள்.





கோபுரத்துக்கு இருமருங்கிலும் தெற்கேயும் வடக்கேயும் இரண்டு தளத்துடன் கூடிய வட்டப் பண்டிகை அமைப்புக் காணப்படுகின்றது. இவற்றை அடுத்து தெற்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் இரண்டு பழனியாண்டவர் காட்சி தருகின்றனர்.





அதேபோன்று தென் கிழக்கிலும் வடமேற்கிலும் விநாயகர் அமர்ந்த நிலையிலும், வடகிழக்கிலும் தென் மேற்கிலும் பாலமுருகன் குழந்தை வடிவலும் காட்சி தருகின்றனர்.





இராஜ கோபுரத்தின் இருமருங்கும் இரண்டு தளத்தில் அமைந்த சதுரப் பண்டிகை அமைப்புக் காணப்படுகின்றது. அனைத்துப் பண்டிகைகளிலும் கோடிப் பூதங்களும் மயில் நந்தி போன்ற வாகனங்களும் காட்சியளிக்கின்றன.

சதுரப்பண்டிகையின் ஒரு பக்கத்தில் முருகன் தந்தைக்கு உபதேசம் செய்த காட்சியும், மறுபக்கத்தில் அன்னை மகாசக்தியிடம் தீமைகள் அழிக்க முருகன் சக்திவேல் பெறும் காட்சியும் வடிவமைக்கப்பட்டுள்ளன.





வாயிற் தூண்களில் கிழக்கு நோக்கி வாயிற் காவலர்களும்






மேற்குப் நோக்கி காவடி ஏந்திய பக்தர்களும் காட்சி தருகின்றனர்.





வாயிலின் நடுவில் இரு பக்கமும் கஜலக்சுமியும்



அவருக்கு இரு மருங்கும் சேவல் சிற்பங்களும் அமைக்கப்பட்டுள்ளன.






யாழ்ப்பாணத்தின் தனித்துவமான கந்தபுராண கலாசாரத்தின் கலை பண்பாட்டு விழுமிய அம்சங்களை வெளிப்படுத்தி நிறுவப்பட்டுள்ள இந்த வாயிற் கட்டடம் எமது இருப்பை உறுதி செய்யும் அடையாளம். இதனைப் போற்றுவதும் பேணிப் பாதுகாப்பதும் எமது கடமை.

நல்லூர்க் கந்தரின் திருவிழாக் காலங்களில் வழமையாக வருகை தரும் காவடிகள். தூக்குக் காவடிகள் பறவைக் காவடிகள்; எதிர்வரும் திருவிழாக் காலங்களில் இந்தக் கவினுறு வாயிலூடாக வருகை தரும் ரம்மியமான காட்சியினைப் பக்தியுடன் காணலாம்.

# மேலும் சில புகைப்படங்களின் தொகுப்பு














# இறைமாட்சி வைபவம் 14.01.2021

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் பெருமையை அடையாளப் படுத்தும் வண்ணமும் யாழ்ப்பாணத்தின் "கந்தபுராணக் கலாசாரத்தினை" உலகிற்கு எடுத்துக் கூறும் வண்ணமும் அமைக்கப்பட்டது - யாழ்ப்பாணத்தின் தனிப்பெரும் அடையாளமாக விளங்கும் நல்லூரான் செம்மணி வளைவு. அதன் இறைமாட்சி வைபவம் கடந்த தைப்பொங்கல் தினத்தன்று (14.01.2021 வியாழக்கிழமை) தெய்வேந்திர முகூர்த்த நன்நேரத்தில் (நண்பகல் 12.00 மணிக்கு) தமிழ், சைவ பாரம்பரிய சிறப்பு வைபவங்களுடன் நடைபெற்றது.





சிவஶ்ரீ கைலாசநாத வாமதேவக்குருக்கள் தலைமையிலான அந்தண பெருமக்கள் வேத மந்திர உச்சாடனங்கள் ஒலிக்க, நாதஸ்வர வித்தகர் திரு பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினர் மங்கல வாத்தியம் இசைக்க, அந்தண குலச் சுமங்கலி பெண்கள் மங்களகரமான ஆரத்தி தீபாராதனை செய்து வாழ்த்திசைக்க, முருகனடியவர்கள் தேங்காய்கள் சிதறடித்து புனிதம் காண, தொடர்ந்து அந்தண பெருமக்கள் பூமாரி பொழிந்திட, அடியவர்களின் அரோகரா கோஷத்துடன் நல்லூரன் செம்மணி வளைவு திறந்து வைக்கப்பட்டது. செம்மணி வெளியும், மண்ணும், ஆகாயமும், காற்றும் அங்கு புனிதம் கண்டு பூரிப்பு கொண்டன. இந்த இறைமாட்சி வைபவத்தின் முதன் நாள் மாலை வளைவிற்கான சாந்தி வைபவ நிகழ்வும் இடம்பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடக்கூடியது.

இறைமாட்சி வைபவத்திற்க்கு பெருந்தொகையான சைவ அடியார்களும், சைவ மத பெரியோர்களும் மற்றும் அன்பர்களும் வருகை தந்து சிறப்பித்தனர். வளைவின் ஊடாக

கோமாதா முதலில் முருகனின் சேவல் கொடியுடன் அழைத்து வரப்பட தொடர்ந்து இரு காளை மாடுகள் பூட்டிய வண்டில் வளைவினூடாகச் சென்றது. இவ் வைபவத்தில் கட்டடக் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டார்கள். வளைவுக்கு ந.சை.த.ப. கலைக்கூடலின் முயற்சியில் 08.08.2021 அன்று மின் ஒளி பெறப்பட்டது.

நல்லூர்க் கந்தனின் திருவிழா ஆரம்பத்துக்கு கட்டியம் கூறுமாற் போன்று இவ் வளைவில் எம்பெருமானின் சேவற்கொடி கொடியேற்றத்துக்கு முதல் நாள் ஏற்றிவைத்து அடையாளப்படுத்தும் ஏற்பாடும் உண்டு. இவ் ஏற்பாட்டுக்கு அமைவாக இவ் வருடம் 12.08.2021 அன்று நண்பகல் 12 மணிக்கு, கந்தப்பெருமானின் சேவற்கொடி நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடலின் கல்விப்பணிப்பாளர் திரு ப. மதூசன் அவர்களாலும், குகனேயர் குழாம் உறுப்பினர் திரு கு. சுதர்சன் அவர்களாலும் நல்லூரான் கந்தவேள் கோட்ட வாயிலில் நிறுவப்பட்டுள்ள நல்லூரான் செம்மணி வளைவின் கோபுரத்தில் கம்பீரமாகப் பட்டொளி வீசிப் பறக்க ஏற்றிவைக்கப்பட்டது. இவ் அரிய நற் கைங்கரியத்துக்கு கந்தசுவாமியாரின் அருட் கடாட்சம் கிடைக்கப்பெற்றமை எமது பாக்கியமே!

















## இறைமாட்சி வைபவத்தன்று நெல் நிரம்பிய பெட்டகம் வளைவினூடாக எடுத்து வரப்பட்டு நல்லூர்க் கந்தசுவாமியாரிடம் காணிக்கையாக்கிப் பிரார்த்தனை நடைபெற்றது.



இந்த நிகழ்வின் மூலம் பல பாரம்பரியங்களும் உண்மைகளும் உணர்த்தப்பட்டுள்ளன. நெல் ஒரு பல் பயன் தரும் தானியமாகும். நெல் தனித்து உணவுக்காகப் பயன்படும் பொருளன்று. உணவு என்று கூறும்போது நெற் பயிரின் நுனி மனிதனுக்கும் அதன் நடுப்பகுதி மாட்டுக்கும் அடிப்பகுதி மண்ணுக்கும் உணவாகப் பயன்படுகின்றது. அவை தவிர்ந்து நெல் ஒரு மங்கலமான பொருளாகவும் சைவத் தமிழர் பண்பாட்டியியலில் மிக நெடுங்காலமாக நெருங்கி இருந்து வருகின்றது.

சைவத் தமிழர் வாழ்வில் இடம்பெறும் திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகளின் போது, தலை வாழையிலையில் நெல்பரப்பி அதன்மேல் நிறைகுடம் வைத்து குத்துவிளக்கேற்றி உறவினர் நண்பர்களை வரவேற்கும் முறையுண்டு.

பெண் பிள்ளைகளின் பூப்புனித நீராட்டு விழாக்களில் அவர்களின் கையில் நெல் நிறைந்த நாழியைக் கொடுத்து, அதற்கு நிறைநாழி எனப் பெயரிட்டு, அவர்கள் அதை வைத்திருக்க, அது போன்று அப்பிள்ளைகள் நிறைவாழ்வு பெற வேண்டி அவர்களை நோக்கி பல்வேறு விதமான ஆரத்திகளைப் பெண்கள் எடுத்து வாழ்த்திச் சிறப்பிப்பர்.

புதுமனைப் புகுவிழாக்களின் போது சைவத்தமிழர் கோயிலில் இருந்து வீட்டில் வழிபடுவதற்கான சுவாமிப் படங்களை எடுத்துவரும்வேளை, அவற்றுடன் நெல் நிறைந்த தட்டினையும் எடுத்து வந்து அவ்வீட்டில் என்றும் பசி பஞ்சம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று பிரார்த்திப்பர்.















கோயில்களில் இடம்பெறும் கும்பாபிஷேக கிரியைகளின் போது நெல்லின் உபயோகம் பெரிதாகப் பேணப்படுவதையும் அறிய முடிகின்றது. சிறப்பாக கும்பாபிஷேக கிரியைகளில் ''நயனோன் மீலனம்'' என்று கூறப்படுகின்ற ஆலய மூர்த்திகளுக்குக் ''கண்திறத்தல்'' சடங்கு நிறைவு பெற்றதும் ''தான்யாதி வாசம்'' என்று சொல்லப்படுகின்ற மூர்த்திகளை நெல்லில் இருத்துதல் இடம்பெறும். அப்போது மூர்த்திகளை கிழக்கு முகமாக இருத்தி அடியார்கள் யாவரும் தங்கள் இரு கைகளாலும் இறைவனுடைய திருமுடியில் நெல்லைத் தூவி நிரப்புவர்.

நெல் ஒரு கருப்பொருள் ஆதலால் இதன்வழி மூர்த்திகளுக்கு உயிரூட்டப்படுவதாகக் கொள்வதுடன் மூர்த்திகளின் திருவுருவங்கள் உளியினால் செதுக்கப்படும் போது தோன்றியிருக்கக் கூடிய சிறு துகள்கள் நிரப்பப்படுவதாகவும் கொள்ளப்படுகின்றது. (இது சிறப்பாகப் புதிதாகக் கோயில் அமைத்து கும்பாபிஷேகம் செய்யும் கருமத்திற்குப் பொருத்தமுடைத்து.)


இத்தகு பெருமைகளைக் கொண்ட நெல், அடியவர்களால் வழங்கப்பெற்று பெட்டகம் ஒன்றில் இடப்பட்டு, நல்லூரான் செம்மணி வளைவின் இறைமாட்சி வைபவம் முடிவுற்றதும், அவ்வளைவினூடாக மாட்டு வண்டிலில் கொண்டு செல்லப்பட்டு; உலக மக்கள் அனைவரும் பசி, பஞ்சம், பிணி அற்று நல்வாழ்வு வாழ அருள் வேண்டி நல்லூர்க் கந்தசுவாமியாரிடம் காணிக்கையாக்கி பிரார்த்தனை நடைபெற்றது.


# நல்லூரான் செம்மணி வளைவினை நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக்கலைக்கூடல் பொறுப்பேற்றுக்கொண்டது.




நல்லூரான் செம்மணி வளைவு 25.05.2021 வைகாசி விசாகத் திருநாளன்று நல்லூர் பிரதேச செயலகத்தினால் நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடலிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. கூடலின் இணைச் செயலர் திரு. த. ஜெயசீலன், திரு. ச. சுதர்சன் அதனைப் பெற்றுக் கொண்டனர்.


இந்த நிகழ்வானது இணைய வழியான செயலி ஊடக இடம்பெற்றது.











உ
**நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல்**
இல. 331, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
Email: nallursaivatamilkoodal@gmail.com | பதிவிலக்கம்: HA/4/JA/359

# அங்கத்தவர் விபரம்

| | | |
|---|---|---|
| | கலாநிதி ஆறு திருமுருகன் | - ஆலோசகர் |
| 1. | முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் | - இணைத் தலைவர் |
| 2. | திரு இலட்சுமணன் இளங்கோவன் | - இணைத் தலைவர் |
| 3. | திரு தனபாலசிங்கம் ஜெயசீலன் | - இணைச்செயலர் மற்றும் வெகுசனத் தொடர்பு |
| 4. | திரு சாம்பசிவம் சுதர்சன் | - இணைச்செயலர் |
| 5. | திரு சண்முகசுந்தரம் சிவகுமரன் | - பெரும் பொருளர் |
| 6. | திருமதி ரவிச்சந்திரன் சாவித்திரிதேவி | - உதவிப்பொருளர் |
| 7. | திரு சிவகுரு தில்லைநாதன் | - சமயப் பணிப்பாளர் |
| 8. | திரு ஜெயேந்திரா ஹபீசன் | - சமயப் பணிப்பாளர் |
| 9. | திருமதி எழிலரசி அன்ரன்யோகநாயகம் | - கல்வி கலாசாரப் பணிப்பாளர் |
| 10. | திரு ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி | - கல்வி கலாசாரப் பணிப்பாளர் |
| 11. | திரு பரமலிங்கம் மதூசன் | - கல்வி கலாசாரப் பணிப்பாளர் |
| 12. | திரு ஜனகன் முத்துக்குமார் | - விழுமியப் பணிப்பாளர் |
| 13. | திரு தில்லைநாதன் குமரன் | - விழுமியப் பணிப்பாளர் |
| 14. | திரு விக்கினராஜா பார்த்தீபன் | - விழுமியப் பணிப்பாளர் |
| 15. | திரு வரதராஜன் பார்த்திபன் | - சமூக நலமேம்பாட்டுப் பணிப்பாளர் |

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல்.
## *'உபகுழு - குகனேயர் குழாம்'*

1. திரு பரமலிங்கம் மதூசன் - இணைப்பாளர்
2. திரு குமாரராசா சுதர்சன்
3. திரு ஜெயேந்திரா ஹபீஷன்
4. திரு அரியராஜா செந்தூரன்
5. திரு ஜெகநாதன் ஸ்ரீவத்ஷன்
6. திரு சதீஸ்வரன் ஹரிகரன்
7. திரு ஸ்ரீஸ்கந்தராஜா சஜீவன்
8. திரு ஐங்கரன் சிவசாந்தன்
9. திரு ஜெயராமன் சாய்குமரன்
10. திரு ஈஸ்வரகாந்தா கஜேந்திரா
11. திரு இராஜகோபாலன் சசீந்திரன்
12. திரு கதிரமலைநாதன் மயூரதாஸ்
13. திரு குமாரவேல் வேல்முருகன்
14. திரு இராஜகோபாலன் சிந்தோசன்



சேவற் கொடியுடன்



மின்னொளியில்


அன்பளிப்பு:
solo PRINTERS
For All Printing Solutions




PRINT@ SOLO PRINTERS - 0760075509